# இலங்கை நாட்டின்
# சீரானவேலை
# வேலைத்திட்டம்
# 2008-2012



# இலங்கை

## நாட்டின் சீரானவேலை வேலைத்திட்டம்
## 2008-2012

ஏப்பிரல் 2008



# உள்ளடக்கம்


இலங்கை, ஒரு நாடு, என்ற வகையில் 01

சீரானவேலை தேசிய வேலைத்திட்டம்
ஐக்கியநாடுகள் அபிவிருத்தி உதவி சட்டகத்துக்கான
தொடர்புகளும் தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளும் 03

சீரானவேலை தேசிய வேலைத்திட்ட
முன்னுரிமைகள் மற்றும் விளைவுகள 04

அமுலாக்கல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பு 11

அனுபந்தம் 12











## சுருக்க விளக்கம்

| | |
|---|---|
| **ADB** | ஆசிய அபிவிருத்தி வங்கி Asian Development Bank |
| **BDS** | வியாபார அபிவிருத்திச் சேவைகள் Business Development Services |
| **CBT** | சமூக மட்டப் பயிற்சிகள் Community-based training |
| **CCA** | பொதுவான நாட்டு மதிப்பீடு Common Country Assessment |
| **DLDPs** | பிராந்திய வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்கள் Divisional Livelihood Development Plans |
| **DWCP** | நாட்டின் சீரானவேலை வேலைத்திட்டம் Decent Work Country Programme |
| **FAO** | உணவு மற்றும் விவசாய அமைப்பு Food and Agriculture Organization |
| **GDP** | மொத்த உள்நாட்டு உற்பத்தி Gross Domestic Product |
| **ILO** | சர்வதேச தொழிலாளர் நிறுவனம் International Labour Organization |
| **ILS** | சர்வதேச தொழிலாளர் தரங்கள் International Labour Standards |
| **INGO** | சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் International Non-governmental Organization |
| **IRAP** | ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அணுகத்தகுந்த திட்டங்கள் Integrated Rural Accessibility Planning |
| **MDG** | ஆயிரமாண்டு அபிவிருத்தி இலக்கு Millennium Development Goals |
| **MSMEs** | நுண்,சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் Micro, small and medium enterprises |
| **NGO** | அரச சார்பற்ற நிறுவனம் Non-governmental Organization |
| **NLAC** | தேசிய தொழில் ஆலோசனைச் சபை National Labour Advisory Council |
| **NPADW** | சீரானவேலைக்கான தேசிய செயல்திட்டம் National Plan of Action for Decent Work |
| **PHC** | நபருக்கான வறுமைக் கணக்கு Poverty Head Count |
| **SIYB** | உங்களது வியாபாரத்தை தொடங்கி விருத்தி செய்யுங்கள் Start and improve your business |
| **TC** | தொழில்நுட்ப ஒத்துழைப்பு Technical cooperation |
| **TVET** | தொழில் நுட்ப சம்பந்தமான கல்வி மற்றும் பயிற்சி Technical Vocational Education and Training |
| **TYDF** | பத்தாண்டு அனுபவ எல்லை அபிவிருத்திச் சட்டகம் Ten Year Horizon Development Framework |
| **UNDAF** | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவிக் கட்டமைப்பு United Nations Development Assistance Framework |
| **UNDP** | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் United Nations Development Programme |
| **UNHCR** | அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் United Nations High Commissioner for Refugees |
| **UNICEF** | ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் United Nations Children's Fund |
| **WFP** | உலக உணவுத் திட்டம் World Food Programme |
| **YE NAP** | இளைஞர் தொழில்வாய்ப்புக்கான தேசிய வேலைத்திட்டம் National Action Plan for Youth Employment |
| **YEN** | இளைஞர் தொழில்வாய்ப்பு வலைபின்னல் Youth Employment Network |

இந்த ஆவணம் இலங்கைக்கான 2008-2012 காலப்பகுதிக்கான நாட்டின் சீரானவேலை வேலைத்திட்டத்தைக் (DWCP) கோடிட்டுக் காட்டுகின்றது. சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் (ILO) தேசிய அபிவிருத்தி முன்னேற்பாடுகளுக்கான பங்களிப்பு, ஐக்கியநாடுகள் கூட்டு திட்ட அபிவிருத்தி வாய்ப்புக்களை இனம் காணல்,பாரிய அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு என்பனவற்றின் அடிப்படையில் சீரானவேலையை ஊக்குவித்தல் என்பனவற்றை ஒன்றுதிரட்டுவதற்கான கட்டமைப்புக்களையும் இது வழங்குகின்றது. கொழும்பிலுள்ள சர்வதேச தொழிலாளர் அலுவலகம் இலங்கையில் நாட்டின் சீரானவேலை வேலைத்திட்டத்தை வடிவமைப்பதில் தீவிர பங்களிப்புச் செய்த சகலருக்கும் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் முத்தரப்பு அங்கத்தவர்களுக்கும் அதன் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றது.

**இலங்கை ஒரு நாடு என்ற வகையில்**

இலங்கை சந்தைப் பொருளாதார அடிப்படையைக் கொண்ட ஒரு ஜனநாயக நாடு. முன்னைய காலங்களில் குறைந்த வருமானம் கொண்ட ஒரு நாடு என்ற நிலையிலிருந்து அண்மைக்காலத்தில்,நடு நிலை வருமானம் கொண்ட நாடு என்ற நிலைக்கு முன்னேறியுள்ளது.25வருட உள்நாட்டு யுத்தத்தின் அதிர்ச்சிகள் மற்றும் 2004ஆம் ஆண்டு சுனாமி என்பனவற்றுக்கும் அப்பால்,நாட்டின் பொருளாதாரம் மீளும் தன்மை கொண்டதாகவே உள்ளது அத்தோடு சவால்களுக்கும் சிறந்தமுறையில் முகம் கொடுத்துள்ளது. இருந்தபோதிலும் உலகமயமாக்கலின் அனுகூலங்களை அதிகமாகப்பெற்றுக்கொள்ள பெருமுயற்சி எடுத்துவருகின்றது. இது அபிவிருத்திச் செயற்பாட்டை சவால்கள் மிகுந்ததாக ஆக்கியுள்ளது. சுவாரஸ்யமான விதத்தில் இலங்கையின் ஆயுள் எதிர்ப்பார்ப்பு,எழுத்தறிவு, இறப்புவீதம் என்பனவற்றின் சமூகக் குறியீடுகள் 99ஆம் ஆண்டின் மனித அபிவிருத்திச் சுட்டெண் வரிசைப்படுத்தலின் படி[1] தெற்காசியாவின் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் கூடியதாகவும், பல அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு ஈடாகவும் காணப்படுகின்றது.

பொருளாதாரத்தின் பிரிவுசார் சேர்க்கையானது விவசாய அடிப்படையிலான பொருளாதாரம் என்ற நிலையிலிருந்து சேவைத்துறை ஆதிக்கம் செலுத்தும் ஒரு துறையாக மாறியுள்ளது. 2005ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கூடுதல் பங்களிப்பு வழங்கியுள்ளது சேவைத்துறையாகும். இது 56வீதமாகும் அதற்கு அடுத்தபடியாக கைத்தொழில் துறை 27வீதமாகவும், விவசாயத்துறை 17 வீதமாகவும் உள்ளது. அதிகரித்துவரும் தாராள மயமாக்கலோடு வேலைவாய்ப்புத் துறையில் சேவைத்துறையே மிகப்பெரிய பிரிவாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் கிராமப் புறங்களில் விவசாயம் இன்னமும் ஒரு பிரதான வேலைவாய்ப்புத் துறையாகவும், ஆதாரத் துறையாகவும் காணப்படுகின்றது. இங்குதான் சனத்தொகையில் பெரும்பகுதி வாழுகின்றது. நாட்டின் தொழிற்படையில் 60%-65% முறைசாராப் பிரிவுகளில் தொழில் புரிவதாக மதிப்பீடுகள் கூறுகின்றன. இதில் பெரும்பாலானவர்கள் நாட்டின் கிராமப் பகுதிகளிலேயே வசிக்கின்றனர்.[2]

2007இல் இலங்கைப்பொருளாதாரம் 6.8வீத வளர்ச்சியைக் கண்டது. இது வரலாற்று ரீதியாக 4-5 வீத[3] வளர்ச்சி என்ற நிலையிலிருந்து வருடாந்தம் 6 வீதத்துக்கு மேற்பட்ட உயர் வளர்ச்சியைக் காணும் ஆற்றல் இலங்கைக்கு உள்ளது என்பதை சுட்டிக் காட்டியது. எவ்வாறாயினும் இலங்கையின் வளர்ச்சி முறையானது, கிராமிய (நபருக்கான வறுமைக் கணக்கு சுட்டெண்-15.7%)[4] மற்றும் பெருந்தோட்டச் சமூகத்தில் (நபருக்கான வறுமைக் கணக்கு சுட்டெண்-32%)[5] வறுமை நிலையை கணிசமான அளவுக்கு குறைக்கப் போதுமானதாக இருக்கவில்லை. 2007 இல் தலாவீத வருமானம் 1617 அமெரிக்க டொலராக[6] அதிகரித்துள்ள அதேவேளை முறைசார் தனியார் துறையின் ஸ்தாவர சம்பளம் 2006இல் குறைந்துள்ளது. சம்பளச் சபையால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த சம்பளம் ஒன்றை உழைக்கும் சகல ஊழியர்களுக்குமான குறைந்தபட்ச வேதனத்தின் மேல்நோக்கிய மீளாய்வு முறைசார் தனியார் துறையின் வேதன வீத குறிகாட்டியில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எவ்வாறாயினும், முறைசார் பிரிவு ஊழியர்கள் 2007இல் ஸ்தாவர வேதன இழப்புக்களால் பாதிக்கப்பட்டனர் அவர்களின் ஊதியமானது விலை அதிகரிப்புக்களை ஈடுசெய்யப் போதியதாக இருக்கவில்லை. மேலும் ஊதியத்துக்கும், வருமானத்துக்கும் இடையிலான தொடர்புகளிலும் பிரச்சினைகள் காணப்பட்டன. பிராந்திய ரீதியாகவும், பால்ரீதியாகவும், அரச மற்றும் தனியார் துறை பிரிவுகளிலும் இந்தப் பிரச்சினைகள் காணப்பட்டன. நாட்டில் ஒட்டுமொத்த நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதில் எதிர்நோக்கப்படும் சவால்களில், தொழில்வாய்ப்புக்களில் சமத்துவம்,தொழிற்சந்தை விதிமுறைகள், ஆற்றல் அபிவிருத்தி, பெண்கள் பிரதிநிதித்துவம், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குறைபாடுகள் என்பன சமீபத்தில் முகம்கொடுக்க வேண்டியுள்ள சவால்களாகும்.



[1]இலங்கை மனித அிவிருத்தி தரப்படுத்தல் 2007.˙.08 இணையம்: http://hdrstats.undp.org/Countries/data_Sheets/cts_ds_LKA.html

[2]தொழிற்படை மதிப்பீடு2007(4வது காலாண்டு)இணையம்: http://www.statistics.gov.lk/Samplesurvey/Bullet20074q.pdf

[3]இலங்கை மத்தியவங்கி அறிக்கை – வருடாந்த அறிக்கை2007.இணையம் : http://www.cbst.gov.lk/pics_n_docs/10_publication/_docs/efr/annual_report/Ar2007/Ar_Data2007E/5_Chap_1_e.pdf

[4]வறுமைக் குறிக்காட்டிகள்2006.˙.07.இணையம்:http://www.statistics.gov.lk/poverty/poverty/povertyindicators.pdf

[5]Ibid

[6]இலங்கை மத்திய வங்கி அறிக்கை 2007: இணையம் http://www.cbsl.gov.lk/pics_n_does/10_publication/_does/etr/annual_report/ar2007/ar_data2007>e/5_chap_1_e.pdf

**இலங்கை ஒரு நாடு என்ற வகையில்**

வளர்ச்சியை சமத்துவம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியோடும், சமூக அபிவிருத்தியோடும் ஒன்றுக்காக இன்னொன்றை தியாகம் செய்யாமல் சமப்படுத்த வேண்டிய அவசரத் தேவையும் ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு இலங்கை அரசாங்கம் "பத்தாண்டு அனுபவ எல்லை அபிவிருத்திக் கட்டமைப்பு-2006-2016": "மஹிந்த சிந்தனை புதிய இலங்கைக்கான துாரநோக்கு"நவம்பர் 2006இல் முன்வைக்கப்பட்டது.இது பேரண்டப் பொருளாதார மற்றும் வறுமைக்கு சார்பான சமூக அபிவிருத்திச் சவால்கள் மற்றும் மூலோபாயங்கள் என்பனவற்றை உள்ளடக்கியதாக அமைந்தது.

நாட்டுக்கான பாரிய அபிவிருத்திச் சவால்களை அது அடையாளம் கண்டது:வறுமையின் அதி உச்ச மட்டம் (சனத்தொகையில் 15.7%); வறுமையும்,வளர்ச்சியும் பெரும்பாலும் மறுதலையாக தொடர்புபட்டுள்ள நிலையில், பிராந்திய சமானமின்மை; தொழிற்படையில் வருடாந்தம் புதிதாகப் பிரவேசிக்கும் 2.8 மில்லியன் பேருக்கான வேலைவாய்ப்பை உருவாக்குதல் விஷேடமாக படித்த இளைஞர்கள்;ஓரங்கட்டப்பட்ட மற்றும் பலவீனமான குழுக்களை (முதுமையடைவோர், அங்கவீனர், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள்) அபிவிருத்திச் செயற்பாட்டுக்குள் சேர்த்துக்கொள்ளல்;மனிதவள அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அபிவிருத்திகளுக்காக பெருந்தோட்ட சமூகத்தின் தேவைகளில் விஷேட கவனம் செலுத்தல்;பால் சமத்துவம் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் என்பன இவற்றில் அடங்கும்.



[7] DCS வறுமை குறிகாட்டிகள்

**ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவிக்கட்ட-மைப்புடன் (UNDAP) நாட்டின் சீரானவேலை வேலைத் திட்டத்தின் (DWCP) தொடர்புகள் மற்றும் தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள்**



இலங்கையில், நாட்டின் சீரானவேலை வேலைத் திட்டமானது அபிவிருத்தி உதவிக்கட்டமைப்புக்களான ஆயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகள் (MDG's), ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவிக்கட்டமைப்பு (UNDAF) சீரானவேலைக்கான நடவடிக்கைகளின் தேசிய செயல் திட்டம் (NPADW) அரசாங்கத்தின் பத்தாண்டு அனுபவ எல்லை அபிவிருத்திக் கட்டமைப்பு என்பனவற்றோடு செயற்படுவதாகும்

தீவிரமான பங்குபற்றல் மற்றும் அரசாங்க மற்றும் சமூகப் பங்காளிகளின் ஆலோசனைச் செயற்பாடு என்பனவற்றின் தொடராக 2006இல் சீரானவேலைக்கான நடவடிக்கைகளுக்கான தேசியத்திட்டம் அமுல் செய்யப்பட்டது. இந்த ஆவணமானது, பேரண்டப் பொருளாதார அபிவிருத்திக் கட்டமைப்பில்,சமூக அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை உள்ளடக்க அரசாங்கத்தின் திடசங்கற்பத்தை கோடிட்டுக் காட்டுகின்றது அடிப்படையில் பத்தாண்டு அனுபவ எல்லை அபிவிருத்தி சட்டகமாக அமைகின்றது.

சீரானவேலைக்கான தேசிய செயல்திட்டமானது பத்தாண்டு அனுபவ எல்லை அபிவிருத்தி சட்டகத்துடன் இணைந்து நாட்டின் சீரானவேலை வேலைத் திட்டத்தின் 2008-2012 அபிவிருத்திக்கான அடிப்படைகளுக்கு வழியமைத்தது.

நாட்டின் சீரானவேலை வேலைத்திட்டத்தினை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுவான நாடுகள் மதிப்பீடு (CCA) இன் முடிவுகளையும், மதிப்பீடுகளையும் கவனத்தில் கொண்டுள்ளது. இலங்கை எதிர்கொள்ளும் பிரதான அபிவிருத்திச் சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள் சம்பந்தமாக இவை கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன. 2006 அக்டோபரில் பூர்த்தி செய்யப்பட்ட பொதுவான நாடுகள் மதிப்பீட்டில் இலங்கையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவிக் கட்டமைப்புடன் அடிப்படைகள் தோற்றம்பெற வழிவகுத்தன.

ஐக்கிய நாடுகள அபிவிருத்தி உதவிக் கட்டமைப்பின் UNDAF சூத்திரமயமாக்கலில் அதன் வறுமைக் குழுவுக்கு சர்வதேச தொழிலாளர் நிறுவனம் (ILO) இணைத் தலைமை தாங்கியது. அத்தோடு வறுமையை வெற்றிகொள்ள சீரானவேலையை அடிப்படையாக்கி ஒருங்கிணைக்கப்பட வேண்டியதன் தேவையையும் ஏனைய ஐக்கிய நாடுகள் முகவராண்மைகளுக்கு அது வலியுறுத்தியது. மேலும் இலங்கையில் சீரானவேலையை ஊக்குவிப்பதில் தமது ஈடுபாட்டுக்கு ஆதரவாக சர்வதேச தொழிலாளர் நிறுவனம் (ILO) அதன் நிகழ்ச்சித்திட்ட சுற்றையும் மாற்றியது, UNDAF ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவிக் கட்டமைப்பின் அமுலாக்க காலப்பகுதியான 2008-2012 காலப்பகுதியோடு ஒத்துப்போகக் கூடியதாக இந்த மாற்றம் அமைந்தது.

பின் இணைப்பு1 நாட்டின் சீரானவேலை வேலைத்திட்டம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவிக் கட்டமைப்பு மற்றும் பத்தாண்டு அனுபவ எல்லை அபிவிருத்திச் சட்டகம் என்பனவற்றுக்கு இடையிலான விரிவான தொடர்பை இது விளக்குகின்றது.



## நாட்டில் சீரானவேலை வேலைத்திட்ட முன்னுரிமைகள் மற்றும் பெறுபேறுகள்

வறுமைக் குறைப்பு மற்றும் சகலருக்கும் சீரானவேலை தேசிய முன்னுரிமையானது இலங்கையிலுள்ள நாட்டு நிலைமைக்கும், நாட்டின் பகுதிகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள முன்னுரிமைகளுக்கும் இடையிலான உள்ளாந்தப் பிரிவுகளை வரையறை செய்கின்றது. இதன் விளைவாக இந்த முன்னுரிமைப் பரப்பானது சீரானவேலைவாய்ப்பு வசதிகளை விருத்தி செய்து ஊக்கப்படுத்தும் தலையீடுகளின் மூலம், தேசிய வறுமைக் குறைப்பு மூலோபாயங்களுக்கு ஆதரவாக இருக்கின்றது. தொழிற்சந்தை முகாமைத்துவத்தை மேம்படுத்தல், பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி என்பனவற்றுக்கான சமூகக் கலந்துரையாடலை விருத்தி செய்தல் என்பனவும் இதில் அடங்கும்.

வறுமைக் குறைப்பு மற்றும் சகலருக்கும் சீரானவேலை என்ற குறிப்பான விடயத்தில் கவனம் செலுத்த, முத்தரப்பு அங்கத்தவர்கள் தலையீட்டுக்கான அல்லது நாட்டின் வேலைத்திட்ட விளைவுகளுக்கான மூன்று முக்கிய பரப்புக்களை இனம் கண்டுள்ளனர். இவை எல்லாமே சர்வதேச தொழிலாளர் நிறுவனம் மற்றும் ஏனைய அபிவிருத்திப் பங்காளிகளுடனான ஈடுபாடு மற்றும் பங்குடமை என்பனவற்றிலேயே தங்கியுள்ளது.நாட்டு முன்னுரிமையை அடைந்து கொள்வதில் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தில் உலக வேலைத்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதில் கையாளப்படும் மூலோபாயங்களை ஒருங்கிணைக்க வேண்டிய தேவையும் அங்கத்துவர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மூன்று தேசிய வேலைத்திட்டத்தின் பெறுபேறுகளானது, ஐக்கிய நாடுகள் அபிவிருத்திக் கட்டமைப்பு மதிப்பீட்டின் அடிப்படையில் அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு இலங்கையில் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் ஒப்பீட்டளவிளான அனுகூலங்களும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

மூன்று தேசிய வேலைத்திட்டங்களின் பெறுபேறுகளும் தலையீட்டுக்கான தாக்கத்தின் அடிப்படையில் பின்வருமாறு அமைகின்றன.

**முன்னுரிமை: வறுமைக் குறைப்பு மற்றும் சகலருக்கும் சீரானவேலை**

**பெறுபேறு1:** பொருளாதார ரீதியாகப் பின்னடைந்துள்ள மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேலும் சிறந்த தொழில் வாய்ப்புக்கான சாத்தியங்களை மேம்படுத்தல்.

**பெறுபேறு2:** தொழிலாளர் நிர்வாகத்தை மேம்படுத்தல் மற்றும் பாரபட்சமற்ற தொழில் வாய்ப்பு பழக்கங்களை ஊக்குவித்தல்.

**பெறுபேறு3:** தொழிற்பாதுகாப்பு,உற்பத்தித் திறனாற்றல் மற்றும் போட்டித்தன்மை என்பனவற்றில் முத்தரப்பு ஒத்துழைப்புக்களை விருத்தி செய்தல்.

**இடைத் தொனிப்பொருள்கள்:** முறைசாரா பொருளாதாரம்;பால் சமத்துவம்;சர்வதேச தொழிலாளர் தரங்களை அங்கீகரித்தல் மற்றும் அதற்கான விண்ணப்பங்களை ஊக்குவித்தல்; வேலைத்தளத்தில் HIV/AIDS தவிர்ப்பு சம்பந்தமான நடைமுறை விதிகளை பின்பற்றல்.





இடைத் தொனிப்பொருள்கள் விஷேட வேலைத்திட்டங்களாகும்.இவை இந்த மூன்று பெறுபேறுகள் மற்றும் அவற்றின் தலையீட்டு மூலோபாயங்கள் என்பன நாட்டில் சீரானவேலை வேலைத்திட்டத்தின் நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கக் கட்டத்தின்போது கவனம் செலுத்தப்பட வேண்டியவையாகும்.

**பெறுபேறு1:**

**பொருளாதார ரீதியாகப் பின்னடைந்துள்ள மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேலும் சிறந்த தொழில் வாய்ப்புக்கான சாத்தியங்களை மேம்படுத்தல்:**

நலன்புரி விடயங்களைப் பேணும் ஒரு வெற்றிகரமான நாடாக இலங்கைக் கருதப்படுகின்றது.இருப்பினும் கடந்த பல தசாப்தங்களாக பொருளாதார ரீதியாகப் பின்னடைந்துள்ள மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதிலும், வேலை வாய்ப்புக்களை வழங்குவதிலும் அது பல சவால்களைச் சந்தித்து வருகின்றது. பொருளாதார ரீதியாகப் பின்னடைந்தவர்களின் வகைப்படுத்தலில் இளைஞர்கள் (பிரதான கவனப்பிரிவு) கிராமப்புற வறிய மக்கள்,புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (குறிப்பாகப் பெண்கள்) சுனாமி மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்கள், மற்றும் படைப்பிரிவுகளிலுள்ள சிறுவர்கள் ஆகியோர் அடங்குவர்.

உற்பத்தித் திறன் வேலைவாய்ப்புக்கான சிறந்த ஒரேயொரு அனுகுமுறை,வறுமை மற்றும் ஆபத்தான நிலைமைகளில் இருந்து விடுபடலாகும். மேலும் இது ஆயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகள் (அனுபவ)மற்றும் இலங்கையின் பத்தாண்டு அனுபவ எல்லை அபிவிருத்திக் கட்டமைப்பு (TYDF) இலக்குகள் என்பனவற்றை அடைந்துகொள்ளவும் இன்றியமையாததாகும். மேலும் சிறந்த தொழில்வாய்ப்புக்களை அடைந்து கொள்வதற்கான சர்வதேச தொழிலாளர் நிறுவன ஆதரவு வேலைத்திட்டம் (அதன் மூலம் வறுமையைக் குறைத்தல்) பின்வரும் பெறுபேறுகளில் கவனம் செலுத்தவுள்ளது.

- **இளைஞர் தொழில்வாய்ப்புக்கான தேசிய வேலைத்திட்டத்தை அமுல் செய்வதற்காக (YENAP) விருத்தி செய்யப்பட்ட வழிகாட்டி**

  இலங்கையில் தொழில் வாய்ப்பென்பது வாழ்வதற்கான ஒரு வருமானத்தை ஈட்டுவதுமட்டுமல்ல. ஆனால் இது இளைஞர்களின் அபிலாஷைகளோடு இரண்டறக் கலந்தது, அதுவே சமூக அந்தஸ்த்து மற்றும் சமூக ஒன்றுதிரட்டலாகவும் மாறுகின்றது. இலங்கையின் இளைஞர்கள், இலங்கை சமூகத்தை நியாயமற்றதாகவும், சமத்துவமற்றதாகவுமே காணுகின்றனர். ஆற்றல் அபிவிருத்திச் சேவையில் உள்ள குறைபாடுகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி மூலம் திரட்டப்பட்ட நன்மைகள் மற்றும் வளங்களை விநியோகிப்பதில் காணப்படும் சமத்துவமின்மை, இந்த விடயங்களைக் கையாளுவதில் பிரதான நிறுவனங்கள் அடைந்துள்ள தோல்விகள் என்பன காரணமாக இளைஞர்கள் விரக்தியடைந்துள்ளனர். அனுபவங்கள் மூலமான இந்த உணர்வு மற்றும் விரக்தி என்பன கடந்த மூன்று தசாப்தங்களாக நிலவும் உள்நாட்டு ஒழுங்கீனங்களுக்கு மூலமாக அமைந்துள்ளன, மேலும் இந்தப் பிரச்சினைகள் நெருக்கடிகள் ஏற்படுகின்ற காலகட்டத்திலும், இயற்கை அனர்த்தங்கள் எற்படுகின்ற காலகட்டத்திலும் அதிகரித்து வந்துள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

  இலங்கை அரசாங்கம் 2007 ஜுலையில், இளைஞர் தொழில்வாய்ப்பு தேசிய வேலைத்திட்டத்தை வகுப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது.இது சம்பந்தமான பிரதான அமைப்புக்களின் ஆலோசனையோடு இது தொடங்கப்பட்டது. இளைஞர்களுடனும், இது தொடர்பாக ஆலோசனைகள் நடத்தப்பட்டதன் மூலம், இந்தச் செயற்பாட்டின் சட்டபூர்வ தன்மை உறுதிசெய்யப்பட்டது மட்டுமன்றி, இலங்கையில் இதனோடு தொடர்புடையவர்களிடமிருந்து உரிமைத்துவம் ஒன்றும் உருவாக்கப்பட்டது. “4Es” என்ற எண்ணக்கரு கட்டமைப்புக்குள் இது உருவாக்கப்பட்டது உலக ரீதியான ஐ.நா ஆதரவுடன் கூடிய இளைஞர் வேலைவாய்ப்பு வலைபின்னல் (YEN) மூலம் இந்தத் திட்டம் வகுக்கப்பட்டது. சமதத்துவமான வாய்ப்பு (EQUAL OPPORTUNITY) தொழில் வாய்ப்பு உருவாக்கம் (EMPLOYMENT CREATION) தொழில் வாய்ப்பு சாதக நிலை (EMPLOYABILITY) மற்றும் தொழில் முயற்சியாக்கம் (ENTEPRENEURSHIP) என்பனவே இந்த “4Es” ஆகும்.

  இலங்கையில் இளைஞர் தொழில்வாய்ப்பு வேலைத்திட்டத்தை உருவாக்குவதில் சர்வதேச தொழிலாளர் நிறுவனம் மிக முக்கிய பங்கினை வகித்துள்ளது, அடுத்த ஐந்தாண்டு காலத்தில் மிகவும் ஆக்கபூர்வமான வகையில் இதை அமுல் செய்ய உதவுமாறு இலங்கை அரசு கோரிக்கையும் விடுத்துள்ளது.



- **சிறந்த தொழில்வாய்ப்புக்களை அனுகுமுறைகளை அபிவிருத்தி செய்வதற்கான மூலோபாய தொழிற்பயிற்சி பயிற்சிகள் மற்றும் ஆற்றல் அபிவிருத்தி:**

  வாழ்வாதார மீள்கட்டமைப்புக்கான ஆற்றல் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி என்பன ஆண்களுக்கும், பெண்களுக்கும் மற்றும் சுனாமியாலும், யுத்தத்தாலும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும் கூட அவசியமானவை. தொழில்நுட்பம் சம்பந்தமான கல்வி மற்றும் பயிற்சி (TVET) க்காக ஒருங்கிணைக்கப்பட்ட முறைமையொன்றை குறிக்கோளாகக் கொண்டு ILO சர்வதேச தொழிலாளர் நிறுவனம் தலையீடுகளை மேற்கொண்டுள்ளது; பயிற்சி நிலையங்களின் பன்முகத் தன்மையை ஊக்குவித்தல்; அத்தகைய சேவை விநியோகப் பொறிமுறையை குறிப்பாக கிராமங்களுக்கும் மோதலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் கொண்டு செல்லக்கூடிய வழிமுறைகளை ஊக்குவித்தலும் இதில் அடங்கும்.

- **வாழ்வாதார சந்தர்ப்பங்கள் மற்றும் சிறந்த தொழில்வாய்ப்பு என்பனவற்றை ஊக்குவிப்பதற்கான ILO சர்வதேச தொழிலாளர் நிறுவனம் கருவிகளை ஊக்குவித்தலும் பயன்படுத்தலும்.**

  முறைசாரா பிரிவில் நுண்,சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை (MSMEs) உருவாக்கக்கூடிய ஒரு சூழலை தோற்றுவிப்பது, வாழ்வாதார சந்தர்ப்பங்களை ஊக்குவிப்பதற்கு அவசியமானதாகும். யுத்தத்தில் இருந்து மீண்டு வருபவர்களுக்கும் (இளைஞர்கள், சிறுவர் படையினர்) சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும்,மற்றும் பொதுவாக வறுமையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் வாழ்வாதார வசதிகள் ஏற்படுத்தப்படுவது மிகவும் அத்தியாவசியமானதாகும். அரசாங்கம், நன்கொடையாளர்கள், அபிவிருத்தி முகவராண்மைகள் INGO'S- சர்வதேச அரச சார்பற்ற மற்றும் NGO'S- அரச சார்பற்ற மற்றும் தனியார் துறை ஆகியவற்றுக்கிடையில் பாதிக்கப்பட்ட இடங்களில் வாழ்வாதார வாய்ப்புக்களை மறுசீரமைப்பதில் பலவீனமான ஒத்துழைப்புக்கள் காணப்படுகின்றன. இதனால் மீட்பு நடவடிக்கைகளும் பூர்த்தியடையவில்லை. ILO-சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் தலையீடு இதில் சில விடயங்களில் கவனம் செலுத்த வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது. ILO-சர்வதேச தொழிலாளர் நிறுவன ஊக்குவிப்புக் கருவிகளான (IRAP, DLDPs, CBT, BDS மற்றும் SIYB) முறையே ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டம், பிராந்திய வாழ்வாதார அபிவிருத்தித் திட்டம், சமூக மட்டப் பயிற்சிகள், வியாபார அபிவிருத்திச் சேவைகள் மற்றும் உங்களது வியாபாரத்தை தொடங்கி விருத்தி செய்யுங்கள்- என்பனவற்றின் பிரயோகம் மற்றும் வாழ்வாதார சந்தர்ப்ப திட்டமிடல் முறைகள்,சிறந்த தொழில்கள் என்பனவற்றின் மேம்பாட்டுக்கும் இது அவசியமாகியுள்ளது.

**நிகழ்ச்சித் திட்ட மூலோபாயம் :**

அ) பொருளாதார ரீதியாகப் பின்னடைந்துள்ள மக்களுக்கான அரசாங்க செயற்திட்டங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை ஆதரவு - இளைஞர் தொழில் வாய்ப்பு தேசிய வேலைத்திட்ட அமுலாக்கத்துக்கான மூலோபாயம்.

ஆ) மாவட்ட மட்டத்தில் வாழ்வாதார ஆதரவுகளை ஒருங்கிணைப்பதற்கான சர்வதேச தொழிலாளர் நிறுவனம் உபகரண மற்றும் திட்டமிடல் முறைமைகளை ஊக்குவிப்பதற்கான தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை ஆதரவு.

இ) பயிற்சிக் கொள்கைகள்,பயிற்சி நிலையங்கள்,மற்றும் திட்டங்கள் என்பனவற்றை நியாயமான பயிற்சி கொள்கை வடிவமைப்பு மூலம் சந்தை தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக,திறனாற்றல்மிக்கதாகவும்,தரமானதாகவும் விருத்திசெய்ய தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை ஆதரவு.

ஈ) வறுமைக்குறைப்பு,தரமான வேலைவாய்ப்புக்களை ஒன்றுதிரட்டல் ஆகிய அரசாங்க மூலோபாயங்கள் மாவட்டரீதியாக வறிய மக்களை இலக்காகக் கொண்ட பொருத்தமான ஒருங்கிணைக்கப்பட்ட சிறிய தொழில்முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் என்பனவற்றை அமுலாக்க ஆதரவு வழங்கல்,அத்தோடு இந்த விடயத்தில் தேசிய ரீதியில் கவனம் செலுத்தல்.இந்தத் திட்டங்கள் மூலம் கற்ற பாடங்களை தேசிய கொள்கை மட்டத்தில் மாற்றம் செய்தல் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் மாற்றல்.

| குறிகாட்டிகள் | இலக்குகள் |
|---|---|
| I. இளைஞர் வேலைவாய்ப்புக்களை அரசாங்கத்தின் தேசிய செயற்திட்ட வழிகாட்டிகளைப் பூர்த்தி செய்வதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் கருப்பொருள் ரீதியான பணிக் குழுக்களை சர்வதேச தொழிலாளர் நிறுவன உறுப்பினர்கள் வடிவமைத்தல்.<br>ii. வேலைவாய்ப்பின்மை வீதம் குறைக்கபட்டுள்ளது.<br>iii. இளைஞர்களாலும், வருமானம் குறைந்தவர்களாலும் வேலைவாய்ப்பு வேவைகளைப் பாவித்தல்.<br>iv. ஆற்றல் அபிவிருத்தி காரணமாக சிறந்த மற்றும் சீரானவேலைபுரிவோர் வீதம் சனத்தொகையில் அதிகரிப்பு. | அ) YENAP அமுலாக்கத்துக்கான வழிகாட்டி நன்கொடையாளர்களுக்கு சமர்ப்பிப்பதற்கான செயற்பாடுகள் தயார்.<br>ஆ) வேலைவாய்ப்பின்மை வீதத்தில் 30% குறைப்பு வாழ்வாதார மீட்புக்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பு வேலைத்திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன.<br>இ) இளைஞர்களாலும்,வருமானம் குறைந்தவர்களாலும் வேலைவாய்ப்புச் சேவைப்பாவனையில் 10% அதிகரிப்பு.<br>ஈ) ஆற்றல்/கொள்ளளவு மேம்பாடுகள் காரணமாக முன்னோடிப் பிரதேசங்களில் சிறந்த தொழில் உள்ளோர் எண்ணிக்கை சனத்தொகையில் 20% இலக்கு. |



**பெறுபேறு2:** **மேம்படுத்தப்பட்ட தொழிலாளர் நிர்வாகம் மற்றும் சமத்துவமான வேலைவாய்ப்பு செய்முறைகளை ஊக்குவித்தல்.**

அபிவிருத்தியடைந்துவரும் நாடு என்ற வகையில், செலவுகளைக் குறைக்கும் அதேவேளை உலகமயமாக்களின் உச்சமட்ட அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வது, இலங்கையைப் பொறுத்தமட்டில் ஒரு சவாலாகவே உள்ளது. இலங்கைக்கான புதிய தரவுகளின் மூலம் தெரிய வருவதாவது, தொழிற் சந்தையில் பெண்களின் அதிகரித்த பங்களிப்போடு, தொழிற் படையின் பங்களிப்பு வீதம் கடந்த சில தசாப்தங்களில் உறுதியாக அதிகரித்து வந்துள்ள நிலையிலும், ஒப்பீட்டளவில் தொழிற்படை பங்களிப்பில் இன்னமும் சிறியது என்றே எமது நாடு வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வேலையில்லாப் பிரச்சினை அதி உயர்வாக உள்ளது. குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பால்நிலை ரீதியில் இது உயர்வாக காணப்படுகின்றது. என்ற ரீதியிலேயே நாடு வகைப்படுத்தப்பட்டுள்ளது[1]. முறைசாரா பொருளாதாரமானது. இலங்கையின் பொருளாதாரத்திலும், தொழிற்சந்தையிலும் கணிசமான பங்கினை வகிக்கின்றது 2006இல்நாட்டின் மொத்த வேலைவாய்ப்பில் இது 63% பங்கினை வகிக்கின்றது[2]. முறைசாரா பொருளாதாரத்தில் உள்ள பிரதான தொழில் வகைகளாவன: விவசாயம் (இங்கு முறைசாரா தொழிலாளர்களின் விகிதாசார மதிப்பீடு 84%த்ததுக்கும் அதிகமானது) சுரங்கத்தொழில் மற்றும் கல் உடைத்தல் (83%மூமுறைசாரா) ஹோட்டல் மற்றுமூ சிற்றுண்டிச்சாலைகள் (55%முறைசாரா) உற்பத்தித்துறை (46%) கல்வி (15% முறைசாரா). குடிசன மற்றும் புள்ளிவிவரத் திணைக்கள மதிப்பீட்டின்படி மொத்தமாக விவசாயமற்ற தொழில்களில் 51%முறைசாரா பொருளாதாரத்தில் உள்ளன. இந்தத் தொழில்துறைகளில் இருக்கின்ற ஊழியர்கள் கல்வி அறிவு குறைந்தவர்கள் மற்றும் உரிய விதத்தில் அமையாத சுயதெரில் புரிபவர்கள் (47%) இவர்கள் குறைந்தவருமானம்,போதிய பாதுகாப்பினன்மை மற்றும் முறைசாரா அல்லது ஏற்றுக்கொள்ளத் தேவையற்ற நிபந்தனைகளின் கீழ் பணிபுரிபவர்கள். தொழில் வழங்குனர்களும், ஊழியர்களும் மறுசீரமைப்புக்கள் காலத்தின் தேவை என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.ஆனால் இந்த மாற்றங்களுக்கான பண்புகள் மற்றும் விரிவாக்கம் தொடர்பாக இணக்கப்பாடொன்றை எட்டுவது கஷ்டமானதாகவே உள்ளது.

இந்தப் பின்னணியில் பின்வரும் பெறுபேறுகளை வழங்குவதில் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் பங்களிப்பு கவனத்தில் கொள்ளப்படும்.

- **சீரானவேலைக்கான தேசிய வேலைத்திட்ட (NPADW) அமுலாக்கத்துக்காக விருத்தி செய்யப்பட்ட வழிவகைகள்.**

  சீரானவேலை நிகழ்ச்சி நிரலானது அதன் இலக்குகளை அடைந்துகொள்ள சமூகப் பங்காளிகளிடமிருந்து நிரந்தரமான ஒத்துழைப்பையும்,ஈடுபாட்டையும் வேண்டி நிற்கின்றது. சீரானவேலைக்கான தேசிய வேலைத்திட்டம் இந்த இலக்கை அடைந்துகொள்வதற்கான செயற்றிறன் மிக்க ஒரு கருவியாகும். எவ்வாறாயினும் தேசிய வேலைத்திட்ட அமுலாக்கமானது வேலைவாய்ப்பு உருவாக்கம், தொழில் உரிமைகள்,சமூகக் கலந்துரையாடல் மற்றும் சமூகப்பாதுகாப்பு ஆகிய மூலோபாயப் பிரிவுகளில் எதிர்ப்பார்க்கப்படும் பெறுபேறுகளை அடைந்துகொள்ள ஆக்கபூர்வமான ஒரு அபிவிருத்தியை வேண்டி நிற்கின்றது. இந்த தேசியத் திட்டத்தின் உருவாக்கத்துக்கு அரசாங்கத்துக்கு உதவும் விடயத்தில் சர்வதேச தொழிலாளர் நிறுவனம் முக்கியமான பங்களிப்பை வழங்கியுள்ளது. சீரானவேலைக்கான தேசிய வேலைத்திட்டத்தின் செயற்றிறன் மிக்க அமுலாக்கத்துக்கு உரிய வழிவகைகளை விருத்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆதரவை வேண்டியுள்ளது. இந்த ஆதரவானது தொழில் உறவு அமைச்சுக்கும் அதனோடு தொடர்புடைய நிறுவனங்களுக்கும் ஒப்பந்தங்களுக்கான விண்ணப்பங்களுக்கு சிறந்தமுறையில் இடமளித்தல், தொழிலாளர் பரிசோதனை மற்றும் தொழில் சந்தை மதிப்பீடு மற்றும் ஆய்வு துறைகளில் வழங்கப்படும் ஆதரவுகளை ஆரம்ப கட்டமாகக் கொண்டுள்ளது.

- **விருத்தி செய்யப்பட்ட சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதை விரிவாக்குவதற்கான மூலோபாயங்கள்:**

  அர்த்தமுள்ள தொழிலாளர் நிர்வாகம் என்பது ஆற்றல் மிக்க சமூகப் பாதுகாப்பை வேண்டி நிற்பதாகும், இது சகலருக்கும் நன்மையளிக்கக் கூடியது. புத்தாக்க மூலோபாயங்களை வடிவமைப்பதற்காகவும், விரைவில் மக்களை விரிவாகச் சென்றடையும் என எதிர்பார்க்கப்படும் ஆற்றல் மிக்க சமூகப் பாதுகாப்பு ஒழுங்கு முறைகளைக் குறிக்கோளாகக் கொண்ட கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்கள் என்பனவற்றை வடிவமைக்கவும், அரசாங்கத்துக்கும், ஏனைய நிறுவனங்களுக்கும் மற்றும் சமூகப் பங்காளிகளுக்கும் சர்வதேச தொழிலாளர் நிறுவனம் ஆதரவளிக்கின்றது.

[1] UNDP, Human Development Report 2007-2008 (available at http://hdrstats.undp.org).
[2] Deparment of Census and Statistics, Ministry of Finance and Planning, Sri Lanka Labour Froce Survey, Final Report, 2006, available at: www.statistics.gov.lk







- **விரிவான தேசிய வேதனக் கொள்கையின் நகல் விருத்திசெய்யப்பட்டுள்ளது:**

  ஆற்றல் மிக்க தொழிலாளர் நிர்வாகத்தின் செயற்பாட்டுக்கு இலங்கைக்கான விரிவான தேசிய வேதனக் கொள்கையை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவை அவசியமாகும். வேதனங்களை நிர்ணயம் செய்யும் நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகள் என்பனவற்றை விருத்திசெய்ய வேண்டிய அவசியம் உள்ளது.குறைந்தபட்ச வேதனம்,அரசதுறையில் வேதன நிர்ணயம், வேதனப் பேரம்பேசல், செயற்பாட்டுக்குத் தகுந்த கொடுப்பனவுமுறை என்பன இதில் அடங்கும். இதன் விளைவாக விரிவான தேசிய வேதனக் கொள்கையை இணைத்துக்கொள்ள தற்போதுள்ள தொழிலாளர் சட்டங்களை மீளாய்வு செய்ய வேண்டியதும் அவசியமாகும்.

- **புலம்பெயர்தலுக்கான நகல் கொள்கை விருத்திசெய்யப்பட்டு இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

  ஆற்றல் அபிவிருத்தி வெளிப்பாடு மற்றும் உள்ளடக்கம் (வாழ்வு ஆற்றல், ஆங்கிலம், தகவல்தொழில்நுட்பம்) என்பன உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் குறைபாடுகளைக் கொண்டுள்ளதோடு, இலங்கையில் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதில் பாரிய பற்றாக்குறையாகவும் காணப்படுகின்றது. தற்போது சுமார் 1.2மில்லியன் இலங்கையர்கள் வெளிநாடுகளில் வேலைசெய்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் புலம்பெயர்ந்த ஊழியர்களாகக் கருதப்படுகின்றனர். ஆற்றல்மிக்க புலப்பெயர்வை ஊக்குவிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளையும் மீறி 72வீதமான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பயிற்றப்படாத வகைப்பிரிவுக்குள்ளேயே உள்ளனர். மேலும் இலங்கையைப் பொறுத்தமட்டில் இது ஒரு பாரதூரமான விடயமாகத் தொடர்கின்றது நாட்டில் புலப்பெயர்வு சம்பந்தமதாக ஒரு கொள்கையும் இல்லை.

  இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி, சர்வதேச தொழிலாளர் நிறுவனம் புலப்பெயர்வு சம்பந்தமாக நகல் கொள்கையை தயாரித்துவருகின்றது.புலப்பெயர்வில் கொள்கைக் கட்டமைப்பு மற்றும் அதிகாரக் கட்டுப்பாடு;சமூகப் பாதுகாப்பு மற்றும் தொழில் நிபந்தனைகள் பற்றிய விவகாரங்கள்; பொருளாதார ரிதியான வருமானங்கள்,மற்றும் மூலம் சேருமிடம் என்பனவற்றுக்கான பொருளாதார அனுகூலங்கள் என்பன இதில் அடங்கவுள்ள அம்சங்களாகக் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.இந்தக் கொள்கையானது அரசாங்கத்துக்கு நாட்டின் புலப்பெயர்வு சம்பந்தமாக விரிவான கொள்கையை வடிவமைக்க உதவியாக இருக்கும்.

- **சிறுவர் தொழிலாளர்களை நீக்கிக்கொள்வதில் முன்னேற்றகரமாக அமுல் செய்யப்பட்ட மூலோபாயங்களும் வேலைத்திட்டங்களும்.**

  சிறுவர் தொழிலாளர் பற்றிய தேசிய மதிப்பீட்டின்படி[3] இலங்கையில் வாழும் 926037 சிறுவர்கள் பொருளாதார வளமுள்ளவர்கள். எவ்வாறேனும் இந்த எண்ணிக்கை ஏதோ ஒரு வகையில் பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள சிறுவர்களையும் உள்ளடக்கியது. இவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லும்போதே அல்லது வேறு கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும்போதே இந்தப் பொருளாதாரச் செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். தொழில்புரியும் மொத்த சிறுவர்களிலும் 52% மானவாகள் 15வயதுக்குக் குறைவானவர்கள் என்றும் மதிப்பீடு கூறுகின்றது. முன்னுரிமை அளிக்கப்பட்ட ஒரு விடயமாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு சிறுவர் தொழிலாளர்கள் பற்றி இரண்டாவது மதிப்பீடொன்றை நடத்த முத்தரப்பு ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்ளவுள்ளது. இதன்மூலம் இலங்கையில் சிறுவர் தொழிலாளர் பற்றிய விடயங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய உரிய தலையீடுகள் பற்றி இனம்காணப்படும்.

- **எச்.ஐ.வி,எயிட்ஸ் சம்பந்தமாக ச.தொ.அ செயற்பாட்டுக் குறியீட்டுக்கான ஒருங்கிணைந்த ஆதரவுக்கான கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களை வகுத்தல்.**

  இலங்கையில் எச்.ஐ.வி.்.எயிட்ஸ் ஒருங்கிணைந்த கொள்கைகளின் முன்னேற்றகரமான தாக்கத்தின் அடிப்படையில்,தேசிய பங்காளிகள் மற்றும் ச.தொ.அ இணை அமைப்புக்களின் அதிகரித்துவரும் கேள்விக்கமைய வேலைப்பழுக்கள் பகிரப்படும்.

- **முறைசாரா பிரிவு குறித்த அறிவு விருத்திசெய்யப்பட்டுள்ளது.**

  நாட்டின் தொழிற்படையில் 60% த்துக்கும் அதிகமான எண்ணிக்கை முறைசாராப் பிரிவில் தங்கியுள்ளது என்பதைக் கருத்திற்கொண்டு, இலங்கையின் முறைசாராப் பிரிவு குறித்த தகவல் தளம் ஒன்றைக் கட்டியெழுப்ப சர்வதேச தொழிலாளர் நிறுவனம் அதன் அங்கத்தவர்களுக்கு உதவவுள்ளது. இந்த அறிவுத்தளமானது சர்வதேச தொழிலாளர் நிறுவனம் அதன் அங்கத்தவர்களுக்கும் எதிர்காலக் கொள்கை மற்றும் வேலைத்திட்ட தலையீடுகளுக்கு வழிகாட்டியாக அமையும்.

[3] Deparment of Census and Statistics - 1999

| **நிகழ்ச்சித் திட்ட மூலோபாயம்**<br><br>அ) தொழிலாளர் பரிசோதனை மற்றும் சர்வதேச தொழில் தரங்களின் பிரயோகங்கள் சம்பந்தமாக தொழிலாளர் நிறுவனங்களை ஸ்திரப்படுத்த தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை சேவை.<br>ஆ) தேசிய சமூகப் பாதுகாப்பு கொள்கை வகுப்பை முன்னெடுக்க அரசாங்கத்துக்கு ஆலோசனை ஆதரவு.<br>இ) தேசிய வேதனக் கொள்கையை வடிவமைக்க அரசாங்கத்துக்கு தொழில்நுட்ப ஆதரவு சேவை.<br>ஈ) தேசிய புலம்பெயர்வு கொள்கையொன்றை விருத்திசெய்ய அரசாங்கத்துக்கு தொழில்நுட்ப ஆதரவு சேவை.<br>உ) இலங்கையில் முறைசாராப் பிரிவு அறிவுத்தளம் ஒன்றைக் கட்டியெழுப்பும், ஆராய்ச்சியும், தொழில்நுட்ப ஆதரவு சேவையும். | |
|---|---|
| **குறிகாட்டிகள்** | **இலக்குகள்** |
| I. தொழிலாளர் பரிசோதனை ஒருங்கிணைப்பு மற்றும் உறுதியாக்கல்<br>ii. சமூகப்பாதுகாப்பு அபிவிருத்திக்கு நகல் தேசியக் கொள்கை.<br>iii. தேசிய வேதனக் கொள்கை விருத்தி செய்யப்பட்டுள்ளது.<br>iv. தேசிய புலம்பெயர்வுக் கொள்கைவிருத்தி செய்யப்பட்டுள்ளது.<br>v. முறைசாரா பிரிவு அறிவுத்தளம் விருத்தி செய்யப்பட்டுள்ளது. | அ) தொழில் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் தொழிலாளர் பரிசோதனைகளில் 25% அதிகரிப்பு.<br>ஆ) அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மீதான அமைச்சர்கள் மட்டக் குழு கண்காணிப்பு மூலோபாயம்.<br>இ) 2010 ஆண்டளவில் வேதன நிர்ணயத்தை தேசிய வேதன நிர்ணயக் கொள்கையூடாக பயன்படுத்தல்.<br>ஈ) வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் முறைப்பாடுகள் 25% குறைந்துள்ளது.<br>உ) முறைசாரா பிரிவு பற்றிய கொள்கை வகுப்பு ஆதரவுக்கு உறுப்பினர்கள் அறிவுத்தளத்தைப் பயன்படுத்தல். |





**பெறுபேறு3:** **தொழில்பாதுகாப்பு, உற்பத்தித் திறனாற்றல், மற்றும் போட்டித்தன்மை தொடர்புகளை ஆரம்பிக்க முன்னேற்றகரமான முத்தரப்பு ஒத்துழைப்புக்கள்.**

தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளில் சமூகப் பங்காளிகளின் பங்குபற்றலை ஊக்குவிக்க ஒரு வழியாக சமூகக் கலந்துரையாடலில் கவனம் செலுத்துவது இங்கு முக்கியமான ஒரு விடயமாகும். அத்தோடு பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பனவற்றின் மூலம் நல்லாட்சியை உறுதி செய்வதும் இதில் ஒரு முக்கிய அம்சமாகும். சமூக மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை தீர்மானிக்க சமூகக் கலந்துரையாடல் நெறிமுறையை ஸ்திரப்படுத்தவது இதன் குறிக்கோளாகும்.

இலங்கையில் கைத்தொழில் உறவுகள் மற்றும் பிரச்சினைத் தீர்வுகளில் அரசாங்கம் உறுதியான பங்களிப்பை வழங்குகின்றது. சட்டங்கள் மூலமான தலையீடுகளின் ஊடாக இது இடம்பெறுகின்றதே தவிர, சமூகப் பங்காளிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் மூலமாக அல்ல.முத்தரப்பு உடன்பாட்டுக் கட்டமைப்புக்கள் பல்வேறு வடிவங்களில் இருந்திருக்கின்றன. ஆனால் சமூகப்பங்காளிகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கவும், இந்த விடயத்தில் தேசிய மட்டத்தில் கொள்கைத் தீர்மானதத்தில் அவர்கள் பங்களிப்பு வழங்கவும் குறைந்தளவு நடவடிக்கைகளே எடுக்கப்பட்டுள்ளன அல்லது ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. 2001இல் மீளாய்வு செய்யப்பட்ட தேசிய தொழிலாளர் ஆலோசனைச் சபை (NLAC), முக்கூட்டு அமர்வை ஆரம்பத்தில் வழங்குவதற்கான இந்தச் சபை தொடர்பாடல் மற்றும் கலந்துரையாடல் என்பனவற்றுக்கு நியாயமான ஆக்கபூர்வமான அடித்தளம் ஒன்றை வழங்கியுள்ளது.

எவ்வாறாயினும் முத்தரப்பு முடிவுகளை மேற்கொள்வதற்கான ஒரு நெறிமுறையாக தேசிய தொழில் ஆலோசனைச் சபையை முழுஅளவில் பிரயோகிப்பது இன்னும் சாத்தியப்படவில்லை.

இதன் விளைவாக சர்வதேதச தொழிலாளர் நிறுவனத்தின் தலையீடுகள் அல்லது பெறுபேறுகளாவன:

- **சிறந்த சமூகக் கலந்துரையாடல் நெறிமுறையை உறுதி செய்வதற்கான சமூகப் பங்காளிகளின் ஆற்றல்கள்.**
  சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் ஒப்பீட்டுமுனை அதன் முத்தரப்புக் கட்டமைப்பிலேயே தங்கியுள்ளது. இந்த உறுதியிலிருந்து அனுகூலத்தைப் பெற்று சர்வதேச தொழிலாளர் நிறுவனத் தொழில் பாதுகாப்பு, உற்பத்தித்திறனாற்றல் தொடர்பான பெறுபேறுகளை அடைந்துகொள்ள முத்தரப்பு ஒத்துழைப்புக்கு அனுசரணை வழங்குகின்றது, அதன் மூலம் சிறந்த தொழில் மற்றும் சகலருக்கும் கண்ணியமானவேலை என்பனவற்றுக்கான பொறிமுறைகளை உருவாக்கவும் வழி வகுக்கின்றது.
- **பிணக்குத் தீர்வு நடைமுறை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.**
  பிணக்குகள் மற்றும் மனக்குறைகளை கையாளுவதற்கான முறைசார் அல்லது முறைசாரா நெறிமுறையொன்றின் குறைபாடு, சமூகக் கலந்துரையாடல் கலாசாரம் மற்றும் தேசிய அபிவிருத்தியை ஊக்குவித்தல் செயற்பாடு என்பனவற்றை ஸ்தாபிப்பதில் ஒரு பாரிய சவாலாகக் காணப்படுகின்றது. அரச துறையில் உள்ள தொழிற்சங்கங்கள் பாரம்பரியமாக அரசியல் கட்சிகளைச் சார்ந்தவையாக உள்ளன.மேலும் பிணக்குத் தீர்வு என்பது பொதுவாக அரசியல் தலையீட்டின் மூலம் பெறப்பட்டுள்ளதே தவிர, உண்மையான கலந்துரையாடல்கள் மூலமாகப் பெறப்படவில்லை. இது நிரந்தரமானத் தீர்வுகளைத் தவிர்த்துள்ளதோடு,அரசியல் மாற்றங்கள் நிகழும்போது மேலதிக பிணக்குகளுக்கே வழியமைத்துள்ளன. பிணக்குகள் பணிகளைக் குழப்பி உற்பத்தித் திறனாற்றல் நட்டத்தை ஏற்படுத்துகின்றது.

**நிகழ்ச்சித்திட்ட மூலோபாயம்**

அ) தொழில்துறை உலகில் ஏற்பட்டுவரும் சமூகப் பொருளாதார மாற்றங்கள் தொடர்பாக தமது நிறுவன ரீதியான ஆற்றல்களை ஸ்திரப்படுத்திக்கொள்ள தொழிற்சங்கங்களுக்கும்,தொழில் தருனர் அமைப்புக்களுக்கும் தொழில்நுட்ப மற்றும் ஆதரவு சேவை (அதாவது,தொழில் பாதுகாப்பு, உற்பத்தித் திறனாற்றல் மற்றும் போட்டித்தன்மை)

ஆ) தொழில்பாதுகாப்பு, உற்பத்தித் திறனாற்றல் மற்றும் போட்டித்தன்மையை தனியார் மற்றும் அரசபிரிவுகளில் மேம்படுத்துவதற்காக கலந்துரையாடல் நெறிமுறையை விருத்திசெய்யவும் முனனேற்றகரமான முத்தரப்பு ஒத்துழைப்புக்களை உறுதியாக ஸ்தாபித்துக் கொள்ளவும் அரசாங்கத்துக்கு தொழில்நுட்ப மற்றும் ஆதரவு சேவை.

| குறிகாட்டிகள் | இலக்குகள் |
|---|---|
| i. ஆராய்ச்சி மற்றும்கூட்டு வேலைத்திட்ட முன்னேற்பாட்டு செயற்பாடுகள் மூலம் தேசிய அபிவிருத்திக்கு தொழிலாளர் மற்றும் தொழில் தருனர் அமைப்புக்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பு.<br>ii. தனியார் மற்றும் அரசுதுறை பிணக்குத் தீர்வுகளில் ஆக்கபூர்வமான சமூகக் கலந்துரையாடல் நெறிமுறையை அரசாங்கம் பிரயோகித்தல். | அ) தொழில் செய்யும் இடங்களில் தேசிய உற்பத்தித் திறனாற்றல் கொள்கையை அமுல் செய்வதற்கு தொழிலாளர் மற்றும் தொழில்தருனர் அமைப்புக்களால் பல்வேறு நடவடிக்கைகள்.<br>ஆ) 2012இல் அரசதுறையில் 60% த்துக்கு தொழிலாளர் பிணக்குகளைக் குறைத்தல், தனியார் துறையில் 20% த்துக்கு குறைத்தல். |

## அமுலாக்கல் மற்றும் கண்காணித்தல் கட்டமைப்பு

சர்வதேச தொழிலாளர் அமைப்பு,தொழில் மற்றும் மனிதவலு அமைச்சு, தொழில்தருனர் மற்றும் தொழிலாளர் அமைப்புக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரோடு இணைந்து நாட்டின் சீரானவேலை வேலைத்திட்டத்தை அமுல் செய்யும். தேசிய மட்டத்தில் சர்வதேச தொழிலாளர் நிறுவனம் முத்தரப்பு அங்கத்தவர்களோடும் மற்றும் ஏனைய முக்கிய பங்காளிகளோடும் இணைந்து திட்டமிடல், வளங்களைத் திரட்டல், நாட்டின் கண்ணியமான தொழில் வேலைத்திட்டத்தின் அமுலாக்கக் கண்காணிப்பு என்பனவற்றில் பணிபுரியும். சர்வதேச தொழிலாளர் நிறுவன அங்கத்துவ நிறுவனங்கள் பெறுபேறுகளை வழங்குவதில் அமுலாக்கல் பங்காளிகளாகவும்,திட்ட ஆலோசனை/செயற்படுத்தல் குழுக்களில் கட்டுப்பாட்டுப் பொறிமுறைப் பங்காளிகளாகவும் பணியாற்றும்.

சர்வதேச தொழிலாளர் நிறுவனம் ஐ.நாவின் நாட்டுத்திட்ட செயற்பாட்டுக் குழுவின் உறுப்பினராகும். உணவு மற்றும் விவசாய அமைப்பு,அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகர், ஐக்கியநாடுகள் சிறுவர் நிதியம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம், உலக உணவுத்திட்டம்,உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய முக்கிய முகவராண்மைகளோடு நெருக்கமான பங்குடமையை வளர்த்துக்கொண்டுள்ள ஒரு அமைப்புமாகும். சர்வதேச தொழிலாளர் நிறுவனம் ஏற்கனவே பல்வேறு கூட்டு நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. ஐக்கியநாடுகள் அபிவிருத்தி உதவிக் கட்டமைப்பின் கீழ் இந்த முகவராண்மைகளோடு இணங்கிப்போதல் மற்றும் ஒத்துழைத்தல் என்பன நாட்டின் கண்ணியமானன தொழில் வேலைத்திட்ட அமுலாக்கத்துக்காக விரைவில் இடம்பெறவுள்ளன.

அமுலாக்கத்துக்கான ஆற்றல் கட்டமைப்பு டூரின் இல் உள்ள சர்வதேச பயிற்சி நிலையத்தின் ஆதரவின் ஊடாக விஸ்தரிக்கப்படும் மற்றும் ஜெனீவா, பேங்கொக், டில்லி ஆகிய இடங்களிலுள்ள சர்வதேச தொழிலாளர் நிறுவன நிபுணர்களின் நேரடியான உள்ளீடுகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட தேசிய தொழிற்சார் நிபுணர்களின் நிபுணத்துவமும் ஒப்பந்தங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளப்படும். பெறுபேறை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவத்துக்கான சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் உபகரணமாக நாட்டின் சீரானவேலை வேலைத்திடடம் உள்ளதால், சர்வதேச தொழிலாளர் நிறுவனம் அதன் முத்தரப்பு அங்கத்தவர்களோடு சேர்ந்து இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நாட்டுத் திட்டங்களை உருவாக்கிப் பகிர்ந்துகொள்ளும், அமுலாக்கத்துக்கு தேவையான மனிதவளங்கள், நிதி என்பன போன்ற முக்கிய முன்னுரிமைகளை இனங்கண்டு இந்தத் திட்டங்கள் உருவாக்கப்படும்.

தேவைக்கேற்றவாறு வளங்களைத் திரட்டுவதிலும் சர்வதேச தொழிலாளர் நிறுவனம் அதன் முத்தரப்பு அங்கத்தவர்களோடும், ஏனைய முகவராண்மைகளோடும் ஒத்துழைத்துப் பணியாற்றும்.

நாட்டின் சீரானவேலை வேலைத்திட்டத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு தேசிய அபிவிருத்தி முன்னேற்பாடுகள் மற்றும் ஐநா அபிவிருத்தி உதவிக்கட்டமைப்பு என்பனவற்றினூடாக சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் பங்களிப்பு விஸ்தீரனத்தை மதிப்பீடு செய்யவும் வழிவகுக்கும். மேலும் முன்னேற்றங்களை ஏற்படுத்த எங்கு வாய்ப்புக்கள் உள்ளன என்பதில் கவனம் செலுத்தவும் இது உதவும் அத்தோடு மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய பரபரப்புக்களில் கவனம் செலுத்தவும் இது உதவும். நாட்டின் சீரானவேலை வேலைத்திட்டம் ஒரு உயிரோட்டமான செயற்பாடாகும், இதன்மூலம் கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்களும், சிறந்த நடைமுறைகளும் எதிர்காலத் திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சித் திட்டச் செயற்பாடுகளில் பிரயோகிக்கப்படும். பருவகால முத்தரப்பு ஆலோசனைகள்,முன்னேற்ற அறிக்கைகள் (அங்கத்தவர்களுக்கும், சர்வதேச தொழிலாளர் நிறுவன பிராந்திய அலுவலகங்களுக்கும், உப பிராந்தி அலுவலகங்களுக்கும்) மற்றும் சுதந்திரமான தேசிய வேலைத்திட்ட மீளாய்வுகள் என்பன ஆக்கபூர்வமான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளாகும்.





## அனுபந்தம் 1

## ஐ.நா அபிவிருத்தி உதவிக்கட்டமைப்பு,நாட்டின் சீரானவேலை வேலைத்திட்டம் மற்றும் பத்தாண்டு அனுபவ எல்லை அபிவிருத்தி சட்டகம் என்பனவற்றுக்கிடையிலான நிகழ்ச்சித்திட்ட உறவு

| ஐ.நா.அ.உ.க பெறுபேறு 1 | நா.க.தொ.நே.தி பெறுபேறு 1 | ப.அ.எ.அ.ச | நிகழ்ச்சித்திட்ட உறவு |
|---|---|---|---|
| பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக சேவைகள் ஏழைகளுக்கு சம்பந்தமானவை , சமத்துவமானவை.ஆ.அ.இ மற்றும் ஆ.அ.இ ு என்பனவற்றை பூர்த்தி செய்வதை உள்ளடக்கிய நிரந்தரமானவை குறிப்பாகக் கிராமப் பகுதிகளில் கவனம் செலுத்துபவை. | பொருளாதார பின்னடைவு மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேலதிக சிறந்த தொழில்களுக்கான வழிமுறைகளை ஊக்குவித்தல். | தேசிய வேலைவாய்ப்பு மூலோபாயத்தை அமுலாக்கல்<br><br>இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரித்தல்<br><br>பெண்களுக்கு மேலும் வருமான மார்க்கத்தை உருவாக்கல்.<br><br>வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை ஊக்குவித்தல்<br><br>ஆற்றல் மிக்க புலப்பெயர்வை அதிகரித்தல்<br><br>நவீன தேவைகளுக்கு ஈடுகொடுக்க கிடைக்கக் கூடிய பட்டதாரி வேலைத்திட்டங்களை மீளாய்வு செய்தல் | நா.க.தொ.நே.தி யானது ஐ.நா.அ.உ.க இன் பெறுபேறுகளை ஐந்து மூலோபாயத் தலையீடுகள் மூலம் ஆதரிக்கின்றது.இவை ஐந்தும் தொழில் சந்தைகேள்விகளை இலக்காகக் கொள்ளல் இளைஞர் தொழில் வாய்ப்பு,சுனாமி மற்றும் மோதல் பாதிப்பு பகுதிகளில் தொழில் வாய்ப்பு உருவாக்கம்,தொழில் வாய்ப்பு சேவை விநியோகத்துக்கு ஆதரவு,நுண் மற்றும் சிறிய தொழில் முயற்சி அபிவிருத்திகளுக்கு உற்பத்தித்திறனாற்றல் அபிவிருத்தி மூலம் உதவுதல் என்பனவாகும். |
| **ஐ.நா.அ.உ.க பெறுபேறு 2** | **நா.க.தொ.நே.தி பெறுபேறு 2 மற்றும் 3** | **ப.அ.அ.ச மூலோபாயங்கள்** | **நிகழ்ச்சித்திட்ட உறவு** |
| ஆயிரமாண்டு பிரகடனத்தின் கொள்கைகளை உணர்ந்து கொள்ளவும்,சகலரதும் மனித உரிமைப் பாதுகாப்பை ஊக்குவிக்கவும், ஆட்சியதிகாரப் நெறிமுறை மற்றும் செயற்பாடுகள் வழியமைக்கின்றன. | **பெறுபேறு:2:** தொழிலாளர் சட்டங்கள் மற்றும் செயற்பாடுகளின் முன்னேற்றம். | முறைசாராப் பிரிவுக்குள் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை ஒழுங்கமைத்தல்.<br><br>ஆலோசனைச் செயற்பாட்டின் மூலம் தொழிலாளர் மறுசீரமைப்பு அமுலாக்கம்<br><br>தொழில் திணைக்கள கொள்ளளவு.·.<br>செயற்பாடுகள் அமுலாக்க அதிகரிப்பு<br>சமூகப் பாதுகாப்பை உறுதி செய்தல்;சுய தொழில் விருத்தி தேசிய உற்பத்தித் திறனாற்றல் முன்னேற்றம்;ஊ.சே.நி.ஊந.நி என்பனவற்றுக்கு இணங்கும் போக்கை அதிகரித்தல் | நா.க.தொ.வே.திஇன் இரண்டாவது பெறுபேறு,வேலைவாய்ப்பு உருவாக்கத்தின் முதலாவது பெறுபேறுக்கு அனுசரணை வழங்கக்கூடிய தொழிற்சந்தை நிறுவனங்களில் கவனம் செலுத்தப்படுவதை உறுதிசெய்தல்.<br>இலக்குவைக்கப்பட்டுள்ள பிரதான பரப்புகள்:<br>தொழிற்பயிற்சி பயிற்சி, தொழிலாளர் நிர்வாகம்,தொழில் சட்ட அமுலாக்கம், பிணக்குத்தீர்வு.ஐ.நா.அ.உ.க குறிக்கோள்களான சமூகப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் மீளாய்வில் அரசுக்கு தொழில் நுட்ப உதவிகளை வழங்கல். |
| | **பெறுபேறு 3:** தொழில் பாதுகாப்பு,உற்பத்தித்திறனாற்றல் மற்றும் போட்டித்தன்மையில் முத்தரப்பு ஒத்துழைப்பின் முன்னேற்றம் | அரச துறையில் பிணக்குத்தீர்வு நெறிமுறையின் விருத்தி | இந்தப்பெறுபேறில் நா.க.தொ.வெ.தி இன் கவனம் கலந்துரையாடல் செயற்பாட்டின் மூலம் முதலிரண்டு பெறுபேறுகளுக்கும் இடையில் ஆக்கபூர்வமான பிணைப்பை உருவாக்கல், பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஊடாக நல்லாட்சிக்கு அனுசரணை வழங்கும் அனுகுமுறை உள்ளடங்களாக தேசிய அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு ஆதரவு வழங்குவதை இது உறுதி செய்யும். |

# அனுபந்தம் 1

## ஐ.நா அபிவிருத்தி உதவிக்கட்டமைப்பு,நாட்டின் சீரானவேலை வேலைத்திட்டம் மற்றும் பத்தாண்டு அனுபவ எல்லை அபிவிருத்தி சட்டகம் என்பனவற்றுக்கிடையிலான நிகழ்ச்சித்திட்ட உறவு

| ஐ.நா.அ.உ.க பெறுபேறு 3 | நா.க.தொ.வே பெறுபேறு | ப.அ.எ.அ.ச | நிகழ்ச்சித்திட்ட உறவு |
|---|---|---|---|
| சமூக நீதி மற்றும் இணக்கப்பாட்டின் மூலம் அத்திவாரமிடப்பட்ட நிலையான சமாதானத்துக்கான சூழலில் முன்னேற்றம். | | | சமாதானத்தை இலக்காகக் கொண்ட நேரடி வேலைத்திட்டமொன்று நா.க.தொ.வே இல் இல்லாதபோதிலும், அதன் அநேகமான வேலைத்திட்டங்கள் சமாதானத்தை கட்டியெழுப்பல், குறிப்பாக இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் வாழ்வாதாரத்தை மீட்டெடுத்தல், யுத்தம் மற்றும் முன்னாள் படையினர் என பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மத்தியில் வாழ்வாதாரத்தை மீட்டெடுத்தல் என அமைந்துள்ளன. பிணக்குத் தீர்வில் பெரும்பாலான நிகழ்ச்சிகள் மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் ஆக்கபூர்வமாக பிரயோகிக்கக்கூடியவை. |
| **ஐ.நா.அ.உ.க பெறுபேறு 4** | **நா.க.தொ.வே பெறுபேறு** | **ப.அ.எ.அ.ச** | **நிகழ்ச்சித்திட்ட உறவு** |
| அரசியல், பொருளாதார மற்றும் சமூக வாழ்வில் சமமான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக பங்களிப்புச் செய்ய பெண்களை மேலும் வலுவூட்டல் | | | ச.தொ.நி வின் செயற்றிட்டப் பணிகளில் பால் சமத்துவம் மற்றும் சமத்துவம் என்பன இரண்டும் உறுதியாக இரண்டறக் கலந்தவை.இந்த பெறுபேறை அடைவதை இலக்காகக் கொண்டே அதன் அநேகமான வேலைத்திட்டங்களும் உள்ளன.முத்தரப்பு பங்காளிகளின் கொள்ளளவுக் கட்டமைப்பில் விஷேடமாக கவனம் செலுத்தப்படும். |

……………………………………
திரு. மஹிந்த மாதிஹாஹேவ
செயலாளர்
தொழில் உறவு மற்றும் மனிதவலு அமைச்சு

……………………………………
திரு. ரவி பீரிஸ்
பணிப்பாளர் நாயகம்
முதலாளிமார் சம்மேளனம் - இலங்கை

……………………………………
திரு. லெஸ்லி தேவேந்திர
பெதுச்செயலாளர்
இலங்கை சுதந்திர தொழிற்சங்கம்

……………………………………
திரு. டி.டபிள்யூ சுபசிங்க
பொதுச்செயலாளர்
இலங்கை தொழிற்சங்கச் சம்மேளனம்.

……………………………………
திரு. பாலித்த அத்துகோரல
பிரதான அமைப்பாளர்
ஜாதிக சேவக சங்கம்.

……………………………………
திரு. ஷா
தலைவர்
இலங்கை வங்கி உழியர்கள் தொழிற்சங்கம்

……………………………………
திரு. நாத் அமரசிங்க
செயலாளர் நாயகம்
இலங்கை தோட்ட ஊழியர்கள் சங்கம்

……………………………………
திருமதி. டினே ஸ்டியர்மொஸ்
பணிப்பாளர்
ILO வதிவிட அதிகாரி.

……………………………………
டீ.எம்.ஆர் ரசீதீன்
பொதுச்செயலாளர்
தொழிற்சங்கஆராய்ச்சி மற்றும்
கற்கைகளுக்கான தேசிய சங்கம் (NATURE)

……………………………………
திரு. ஹரி சந்திரசேகர
உபதலைவர்
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

……………………………………
திரு. ஜரால்ட் லொட்விக்
பிரதி செயலாளர் நாயகம்
தேசியதொழிலாளர் காங்கிரஸ்

……………………………………
திரு. கே.வேலாயுதம்
பொதுச் செயலாளர்
தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம்

……………………………………
திரு. சமன் ரத்னப்பிரிய
இணை அழைப்பாளர்
சுகாதார சேவைகள் தொழிற்சங்கம் கூட்டமைப்பு

……………………………………
திரு. அன்டன் மார்க்கஸ்
செயலாளர் நாயகம்
சுதந்திர வர்த்தக வலயம் மற்றும்
பொதுச்சேவைகள் சங்கம்

.........................................
எம்.டி.எஸ். எதிரிசிங்க
தொழில் ஆணையாளர் நாயகம்
தொழில் திணைக்களம்.

.........................................
திரு .டபிள்யூ.எச் பியதாஸ
பொதுச்செயலாளர்
அரச சேவை தொழிற்சங்க சம்மேளனம்

.........................................
திரு. ஜி.கே. பியதாஸ
தலைவர்
அகில இலங்கை பொது முகாமைத்துவ உதவி அலுவலகர்கள் தொழிற்சங்கம்.

.........................................
திரு. டீ.சி. வீரசேகர
பொதுச்செயலாளர்
இலங்கை சுதந்திர அரச தொழிற் நங்கங்களின் சம்மேளனம்.

.........................................
திரு.அதிகாரி. ஜயரத்ன
பொதுச் செயலாளர்
பொதுச் சேவைகள் சுதந்திர தொழிற்சங்க கூட்டுச் சம்மேளனம்.

.........................................
சங்கைக்குரிய முருத்தட்டுவே ஆனந்த தேரர்
தலைவர்
பொதுச் சேவைகள் ஐக்கிய தாதியர் தொழிற்சங்கம்

